மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்

**முன்னிலை : திரு.M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்
2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை

E.P.2/2023
in
O.S.39/2004

குப்புசாமி ...... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

–எதிர்–

இளையபெருமாள் .... எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

இந்த மனு 01.07.2025 அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.K.கதிரவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.T.வடிவேல் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு கேட்கப்பட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ......

## <u>உத்தரவு</u>

1. இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 21 விதி 34–ன் கீழ் தீர்ப்பின் படி மனு சொத்தினை பொறுத்து மனுதாரருக்கு கிரயப்பத்திரம்

எழுதிக் கொடுக்கவும், எதிர்மனுதாரர் மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றமே மனுதாரருக்கு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்து அதனை பதிவு செய்து கொடுக்கவும் சொத்து சுவாதீனம் மற்றும் மேல்நடவடிக்கைகளுக்கு உத்தரவு செய்யவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும் இந்நீதிமன்றத்தால் அனுமதித்து வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :

வாதி தவறான அம்சங்களை கொண்டு பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி கோரியுள்ள சொத்து விபரங்கள் சரியானது அல்ல என்றும், தாவா சொத்து வாதிக்கு சேர வேண்டியது அல்ல என்றும், பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி

செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. தீர்வுக்குரிய பிரச்சினை மனு அனுமதிக்கப்படக்கூடியதா?

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் இந்த நிறைவேற்று மனு அசல் வழக்கில் 21.01.2010ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு தீர்ப்பாணை பெற்றவரால் கட்டளை 21 விதி 34-ன் கீழ் உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை மனுதாரருக்கு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுக்கவும், எதிர்மனுதாரர் மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றமே மனுதாரருக்கு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்து அதனை பதிவு செய்து கொடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார். .

6. அசல் வழக்கானது 21.01.2010ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அந்த தீர்ப்பாணை 10.01.2022 தேதியிட்ட மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின்படி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிறைவேற்றுகை மனுவானது 06.04.2023ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த நிறைவேற்றுகை மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.39/2004 ல் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது

மனுதாரருக்கு எதிராக தீர்ப்பானதால் முதல் மேல்முறையீட்டில் எற்பட்ட தீர்ப்பை எதிர்த்து இந்த நிறைவேற்றுகை மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் SA.1084/2012 வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் 10.01.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி இந்நீதிமன்றத்தின் 21.01.2010 தேதியிட்ட தீர்ப்பாணை மீட்டமைக்கப்பட்டது. மேலும் இரண்டாம் மேல்முறையீட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து வேறு எந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாகவோ, அந்த தீர்ப்பாணை மீது தடையுத்தரவு நிலுவையில் இருப்பதாகவோ, எதிர்மனுதாரர் எதுவும் எடுத்துரைக்கவும் இல்லை நிரூபிக்கவும் இல்லை. அசல் வழக்கின் தீர்ப்பானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் இரண்டாவது மேல்முறையீட்டில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி தீர்ப்பாணையில் உத்தரவிட்டவாறு பாக்கி கிரைய தொகையை மனுதாரர் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவிட்டதாலும், அந்த அசல் வழக்கில் தீர்ப்பின் பலனை தீர்ப்பாணை பெற்றவர் அடையும் பொருட்டு இம்மனுவை அனுமதிப்பதே சரியான தீர்வாகும் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளி, மனு தபசில் சொத்தைப் பொறுத்து 01.09.2025 தேதிக்குள் கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்து, அதனை பதிவு செய்து கொடுக்க வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தவறும்பட்சத்தில் மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் 02.09.2025 தேதியில் மாதிரி கிரைய பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க. 02.09.2025.

இந்த உத்தரவு என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2025.07.25 19:31:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்டுமன்னார்கோயில்.